அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் – அரசர்குளம் தென்பாதி ஊராட்சி பள்ளிவாசல் அருகில் செல்லும் சாலைக்கும் அதில் அமைக்கப்பட உள்ள அலங்கார வளைவிற்கு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயர் சூட்டுதல்

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

கடிதம் (நிலை) எண்.58/ஊ.2/2008 நாள் 15.4.2008

விடுநர்
க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை. (பெயரிட்ட உறையில்)

அய்யா,

பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – புதுக்கோட்டை மாவட்டம் – தொடர்பாக.

பார்வை: 1. தங்கள் கடிதம் ந.க. அ6/5528/2007 நாள் 27.11.2007, 13.3.2008, 20.3.2008 மற்றும் 24.3.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க. எண்.94241/07/பராஅ1.2 நாள் 30.1.2008.

பார்வை 1–இல் காணும் தங்கள் கடிதத்தில் உள்ள கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. இப்பொருள் குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 25.1.2008 அன்று அளித்த தீர்ப்பில், அரசு இந்நேர்வில் சட்டப்படி தீர்வு காண வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், திரு. முகமது பாரூக் என்பவர் அறந்தாங்கி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், திரு. என்.கே.எஸ். ஹமீது என்பவர் புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் தடையாணை கோரி வழக்கு (O.S. No.220/07 மற்றும் 335/07) தொடர்ந்துள்ளனர். அரசர்குளம் தென்பாதி ஊராட்சியில் அலங்கார வளைவு மற்றும் அச்சாலைக்கு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பெயர் சூட்டுவது தொடர்பாக இருதரப்பினரிடையே உள் விரோதம் உள்ள காரணத்தினாலும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் நிலை உள்ளது.

2. எனவே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் தென்பாதி ஊராட்சியில் பள்ளிவாசல் அருகில் செல்லும் சாலையில் அலங்கார வளைவு கட்டி அதற்கு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயர் சூட்டுவதற்கும், அச்சாலைக்கு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் சாலை என்று பெயர் சூட்டுவதற்கும் அனுமதி வழங்கக் கோரிய தங்கள் கருத்துரு அரசால் ஏற்கப்படவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளருக்காக.